R5372

# SALVATION - UNIVERSAL AND LIMITED

# இரட்சிப்பு – உலகளவிலானது மற்றும் வரையறுக்கப்பட்டது

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் செய்வார்கள்." 1தீமோத்தேயு 2:4

இந்த வேத வாக்கியம் இரட்சிப்பு உலகளவிலானது என்று போதித்தாலும், மற்ற வேதவாக்கியங்கள் முடிவில் அழிக்கப்படுகிற ஒரு வகுப்பாரைக் குறித்தும் பேசுகிறது. இந்த வேத வாக்கியங்களை நாம் இசைவுபடுத்த முயற்சிக்கும் போது, பல்வேறு வகையான இரட்சிப்பு இருப்பதை நாம் கவனிக்கிறோம். உதாரணத்திற்கு காலையில் ஒரு மனிதன் பற்றி எரிகிற கட்டடத்திலிருந்து காப்பாற்றப்படலாம், பிற்பகலில் குளத்தில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றப்படலாம். அடுத்த நாள் அவன் திவாலா ஆன பேங்கிலிருந்து, பொருளாதார ஆபத்திலிருந்தும் பின்னர் வேறு ஒன்றிலிருந்தும் காப்பாற்றப்படலாம்.

மானிட குடும்பத்தில் ஒரு பொதுவான கஷ்டம் இருக்கிறது. முழு மனுக்குலமும் பாவத்திற்கு கீழாக விற்கப்பட்டது. பரிசுத்த பவுல் இந்த காரியத்தைக் குறித்து எழுதும் போது கூறுகிறதாவது: "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." இது மாபெரும் பேரழிவாக இருக்கிறது. தேவன், இயேசுவை சகல மனுக்குலத்திற்கும் ஜீவனை கொடுப்பவராக அனுப்பினார் என்றும் அவர் அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவராக மரித்தார் என்றும் வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. "மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்........... எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள்." (யோவான் 5:25.28.29) தேவன் "எல்லா மனுஷருக்கும் இரட்சகர்" என்று அப்போஸ்தலர் கூறினபோது மரித்தோரின் இந்த உயிர்த்தெழுதலை மனதில் வைத்திருந்தார்.

முழு மனுக்குல குடும்பமும் ஆதாம் இருந்த அதே நிலைக்கு கொண்டு வரப்படும் என்று நாம் கற்பனை செய்வோமானால், அது நித்திய ஜீவனைத் தான் குறிக்கும் என்பது அவசியமில்லை. ஆதாம் பூரணராக இருந்தார். எனினும் மரணத்திற்குள் விழுந்தார். ஆதாமின் இனம் தண்டனையிலிருந்து முற்றிலுமாக மீட்கப்படும் போது, ஆதாமைப் போல சோதனைக்குள் வைக்கப்படுவார்கள். அப்பொழுது யாராவது தேவனுக்கு கீழ்ப்படியாமற் போனால் நித்திய ஜீவன் அவர்களுக்கு அளிக்கப்படாது. கிறிஸ்து உலகத்தை மீட்டு ஆயிரம் வருட யுக ஆரம்பத்தில் அவரது மத்தியஸ்த ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அது மனிதனை பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கும் நோக்கத்திற்காக ஆகும். அப்பொழுது பாவத்தை தேர்ந்தெடுக்கிறவர்கள் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை தேர்ந்தெடுப்பார்கள். நீதியை தேர்ந்தெடுக்கிறவர்கள் பரிசாகிய நித்திய ஜீவனை தேர்ந்தெடுப்பார்கள். ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனுக்கான வாய்ப்பு கொடுக்கப்படும். ஏனெனில் ஆதாமின் மேல் வந்த தண்டனையிலிருந்து கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டார்கள். தண்டனையாகிய நித்திய மரணமோ அல்லது பரிசாகிய நித்திய ஜீவனோ கொடுக்கப்படுவதற்கு முன்பு அவன் முதலாவது விடுவிக்கப்பட வேண்டும்.

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் (மரண நிலைமையிலிருந்து, கல்லறையிலிருந்து மீட்கப்படுதல்) சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாக (சரியான விலைக்கிரயம்) தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." இங்கே சொல்லப்படுகிற பொதுவாக உலகத்திற்கான ஏற்ற காலம் மேசியாவின் ஆளுகையின் காலமாகும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஆனால் இந்த யுகத்தில் விசேஷமாக ஆசீர்வதிக்கப்படுகிற ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். " உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." இப்பொழுது இந்த ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிற நாம், தெய்வீக சுபாவமாகிய கனம், மகிமை மற்றும் சாகாமையில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரராகும் கிருபையான சந்தர்ப்பத்தை நாம் பெற்றிருக்கிறோம்.